©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 12.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 211A] சென்னை, வெள்ளிக்கிழமை, ஜூன் 28, 2024
ஆனி 14, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு-2055

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:**

எண். 22/2024—சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம் 2–6

எண். 23/2024—தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம். .. .. 7–8

எண். 24/2024—தமிழ்நாடு நகர்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். .. 9–22

எண். 25/2024—தமிழ்நாடு ஒளிவுமறையற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம். .. 23–24

எண். 26/2024—தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டம். .. .. .. .. .. 25–31

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2024

## 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

56–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின் 56–ஆம் பிரிவில்,— (தமிழ்நாடு சட்டம் 28/1978.)

(1). (1) ஆம் உட்பிரிவுக்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

‘‘(1) வளாகம் எதனின் அல்லது ஒரு தனியார் தெருவின் மிக அருகிலுள்ள இடத்திலிருந்து முப்பது மீட்டர் தூரத்திற்குள் வாரியத்தின் கழிவு நீர்ப்பாதை இருக்குமாயின், அத்தகைய வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அத்தகைய தனியார் தெருவின் உரிமையாளர், அத்தகைய வளாகம் அல்லது தனியார் தெருவின் கழிவுநீரை வாரியத்தின் கழிவு நீர்ப்பாதையில் வெளியேற்றுவதற்காக ஒரு கழிவு நீர்ப்பாதை இணைப்பு வழங்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் விண்ணப்பித்தல் வேண்டும். அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், அத்தகைய வளாகத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் அல்லது அத்தகைய தனியார் தெருவின் உரிமையாளர், அத்தகைய கழிவு நீர்ப்பாதை இணைப்பு வழங்குவதில், வாரியத்திற்கு ஏற்படும் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் அவர்கள், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நிபந்தனைகள் மற்றும் தேவைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அத்தகைய வளாகம் அல்லது தனியார் தெருவிற்கு கழிவு நீர்ப்பாதை இணைப்பு ஒன்றை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர் வழங்குதல் வேண்டும். வாரியத்தின் கழிவு நீர்ப்பாதையின் மிக அருகிலுள்ள இடத்திலிருந்து முப்பது மீட்டர் தூரத்திற்குள் இருக்கும் அத்தகைய வளாகம் அல்லது தனியார் தெருவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் எவரும், கழிவு நீர்த்தொட்டி, கழிவுநீர்க் குட்டை அல்லது கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் போன்ற கழிவுநீர் அகற்றுதலுக்கான பிற வழிமுறைகள் எவற்றையும் தொடருதல் அல்லது பின்பற்றுதல் கூடாது.’’;

(2). (2) ஆம் உட்பிரிவில், ‘‘அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் செய்யலாம்—’’ என்ற சொற்றொடருக்காக, ‘‘அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் செய்தல் வேண்டும்—’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும்.

77 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

3. முதன்மைச் சட்டத்தின் 77 ஆம் பிரிவுக்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“77. **குற்றங்கள் மற்றும் தண்டனைகள்.–** (1) இந்தச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு, 46 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, 48 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகள், 49 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (c) கூறு, 50 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 51 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு, 52 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகள், 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 54 ஆம் பிரிவு, 56 ஆம் பிரிவின் (1), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகள், 58 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (b) கூறு, 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 60 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 61 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகள், 62 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 69 ஆம் பிரிவின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி அல்லது பிற முறையாவணம் எதையும் மீறுகிற நபர் எவராயினும், ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கான சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகை அல்லது இவ்விரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும் மற்றும் தொடர் மீறுகையின் நேர்வில், அத்தகைய முதல் மீறுகைக்கான குற்றத் தீர்ப்புக்குப் பின்பு அத்தகைய மீறுகை தொடர்கின்ற போது, நாள் ஒவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் கூடுதல் தண்டத்தொகை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, 45 ஆம் பிரிவின் (2), (4) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகள், 46 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு மற்றும் 68 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதி அல்லது பிற முறையாவணம் எதையும் மீறுகிற நபர் எவராயினும், அந்த முதல் குற்றத்திற்காக, ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாத மற்றும் இரண்டாம் அல்லது அடுத்தடுத்த குற்றம் எதற்காகவும் பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாத ஒரு தண்டத்தொகை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டத்தின் அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட 77 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவுகளானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:– 77–A மற்றும் 77–B எனும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

“77–A . **தண்டனைகளை நீதி முறையில் தீர்மானித்தல்.–** அந்த பகுதியின் அதிகார வரம்பினைக் கொண்டுள்ள செயற்பொறியாளர், 77ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்படி, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தண்டனைகளை நீதிமுறையில் தீர்மானித்தல் மற்றும் விதித்தல் வேண்டும்.

**77–B. மேல்முறையீடு.–** (1) 77–A ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மேலாண்மை இயக்குநருக்கு மேல்முறையீடு ஒன்றை செய்யலாம்.

(2) மேல்முறையீட்டாளர் அந்த கால அளவிற்குள் மேல்முறையீடு செய்யப்படாததற்கு போதுமான காரணம் கொண்டுள்ளார் என மேலாண்மை இயக்குநர் மன நிறைவடைவாராயின், முப்பது நாட்கள் கால அளவு முடிவுற்ற பின்பு செய்யப்பட்ட மேல்முறையீட்டினை ஏற்றுக் கொள்ளலாம்.

(3) மேல்முறையீட்டின் தரப்பினருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பினை வழங்கிய பின்பு, மேலாண்மை இயக்குநர், அது தொடுக்கப்பட்ட தேதியில் இருந்து அறுபது நாட்களுக்குள் மேல்முறையீட்டினை தீர்வு செய்தல் வேண்டும்.”.

## நோக்கக் காரண விளக்கவுரை.

1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தின்படியான (தமிழ்நாடு சட்டம் 28/1978) சிறு குற்றங்களை, குற்றமற்றதாக்கும் பொருட்டு அதனை ஆய்வு செய்யலாம் என தமிழ்நாடு அரசு வழிகாட்டி நிறுவனம் பரிந்துரைத்துள்ளது மற்றும் அரசு, கூறப்பட்ட பரிந்துரையை ஏற்க முடிவு செய்துள்ளது.

2. மேலும், வளாகம் எதனின் அல்லது தனியார் தெருவின் மிக அருகிலுள்ள இடத்திலிருந்து முப்பது மீட்டர் தூரத்திற்குள் வாரியத்தின் கழிவு நீர்ப்பாதை இருக்குமிடத்தில், வளாகத்தின் அல்லது தனியார் தெருவின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரால் கழிவு நீர்ப்பாதை இணைப்பு பெறப்படுவதை கட்டாயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. அதற்கிணங்க, அரசு, மேற்கூறிய நோக்கங்களுக்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 28/1978 ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2), 2(1) மற்றும் 4 ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கை அல்லது ஒழுங்குமுறை விதிகளை பிறப்பிப்பதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
28 ஜூன் 2024.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2024**

## 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2024 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 15ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1999.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவில்,—

(1). (1) ஆம் உட்பிரிவின் (c) கூறில், ‘‘மூன்று இலட்சம்’’ மற்றும் "முப்பது கோடி ரூபாய்க்குக்" எனும் சொற்றொடருக்காக, முறையே, ‘‘இரண்டு லட்சம்’’ மற்றும் "இருபது கோடி ரூபாய்க்குக்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

‘‘(1–A). (1) ஆம் உட்பிரிவில் உள்ளடங்கியது எவ்வாறிருப்பினும் ஆளுநர், அறிவிக்கையின் வாயிலாக, வேளாண்மை அல்லாத நடவடிக்கைகளில் வேலைவாய்ப்பின் சதவீதம், பொருளாதார, வரலாற்று அல்லது சுற்றுலா சார்ந்த முக்கியத்துவம் அல்லது அவர் பொருத்தமெனக் கருதும் அத்தகைய பிற காரணக்கூறுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, எந்தவொரு உள்ளாட்சி பகுதியையும், நேர்விற்கேற்ப, ஒரு பேரூராட்சி, ஒரு நகராட்சி மன்றம் அல்லது ஒரு மாநகராட்சியாக உருவாக்குவதற்கான தனது கருத்தினை அறிவிக்கலாம்.’’.

(3). (2) ஆம் உட்பிரிவின் (b) கூறில், ‘‘(1) ஆம் உட்பிரிவின்கீழ்’’ எனும் சொற்றொடருக்குப் பின்பு, ‘‘அல்லது (1–A) ஆம் உட்பிரிவின்கீழ்’’ எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## நோக்கக்காரண விளக்கவுரை.

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999), 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (c) கூறின்படி, அதில் குறிப்பிடப்பட்ட அத்தகைய பிற காரணிகளைத் தவிர, மூன்று இலட்சத்திற்கு குறையாதது என கணக்கிடப்பட்ட மக்கள் தொகை மற்றும் முப்பது கோடி ரூபாய்க்கு குறையாதது என மதிப்பிடப்பட்ட ஆண்டு வருமானம் கொண்ட எந்தவொரு உள்ளாட்சிப் பகுதியும் ஒரு மாநகராட்சியாக உருவாக்கப்படலாம். எனினும், மூன்று இலட்சத்திற்கு குறைவான மக்கள்தொகை கொண்டுள்ள காரைக்குடி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் நகராட்சி மன்றங்களை உள்ளடக்கிய உள்ளாட்சிப் பகுதிகளின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் ஆன்மீகச் சுற்றுலா பயணிகளை ஈர்த்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மார்ச் 15ஆம் தேதி 2024 அன்று, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டதைப் போன்று, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999 இன் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (c) கூறின்படி, கூறப்பட்ட நகராட்சி மன்றங்களை மாநகராட்சிகளாக உருவாக்கிட கருதப்பட்டுள்ளது.

2. அதன் பின்னர், நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகளுக்கு குறைவான மக்கள்தொகை மற்றும் வருமானம் கொண்ட பல மாவட்ட தலைமையிடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் மற்றும் ஆன்மீகச் சுற்றுலா நகரங்களின் உறுதியான நகரமயமாதல் காரணமாக தொடர்ச்சியாக நிலையான வளர்ச்சி உள்ளது என்றும், திட மற்றும் நீர்மக் கழிவுகளை உயர்தர வெளியேற்றும் வசதி உள்ளடங்கலான ஒரு மேம்பாட்டு உள்கட்டமைப்பு வசதியின் தேவை உள்ளதென்றும், அத்தகைய உள்ளாட்சிப் பகுதியை நேர்விற்கேற்ப, ஒரு பேரூராட்சியாக, நகராட்சி மன்றமாக அல்லது ஒரு மாநகராட்சியாக அறிவிப்பது அவசியமாகிறது என்றும் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், அத்தகைய உள்ளாட்சிப் பகுதியை ஒரு பேரூராட்சியாக, நகராட்சி மன்றமாக அல்லது ஒரு மாநகராட்சியாக அறிவிப்பதற்கான, தமிழ்நாடு சட்டம் 9/1999 இன் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள்தொகை மற்றும் வருமான அளவுகோல்களானது அத்தகைய பகுதியை நேர்விற்கேற்ப, ஒரு பேரூராட்சியாக, நகராட்சி மன்றமாக அல்லது ஒரு மாநகராட்சியாக அறிவிக்க ஒரு தடையாக உள்ளது. எனவே, அதில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள்தொகை மற்றும் வருமான அளவுகோல்களை பொருட்படுத்தாமல் அத்தகைய உள்ளாட்சிப் பகுதியினை, நேர்விற்கேற்ப, ஒரு பேரூராட்சியாக, நகராட்சி மன்றமாக அல்லது ஒரு மாநகராட்சியாக அரசால் அறிவிக்கப்பட ஒரு தகுந்த வழிவகையை செய்வதென கருதப்படுகிறது.

3. எனவே, அரசு, இந்த நோக்கங்களுக்காக, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 9/1999) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இச்சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
28 ஜூன் 2024.

**கி. சீனிவாசன்,**
*முதன்மைச் செயலாளர்.*

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2024

### 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (a) 36 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுத்தல் வேண்டும்.

(b) மற்ற அனைத்து பிரிவுகளும் மாநில அரசு, அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 9/1999.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான), 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,—

(1) (10) ஆம் கூறில், "நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, "நகராட்சி மன்றம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (45) ஆம் கூறில், "நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, "நகராட்சி மன்றம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (46) ஆம் கூறில், "நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, "நகராட்சி மன்றம்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (48) ஆம் கூறில், ''நகராட்சி'' எனும் சொற்றொடருக்காக, ''நகராட்சி மன்றம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

3ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (h) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

3—A எனும் பிரிவை உட்புகுத்துதல்

4. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"**3-A. நகராட்சியின் அமைப்பு அல்லது அதன் பரப்பளவின் விரிவாக்கத்தின் மீதான மாறுதல் கால வகைமுறைகள்.-** (1) நகராட்சியானது அமைக்கப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும்போது அந்த உள்ளூர்ப் பகுதியினை உள்ளடக்கும் நகராட்சி அல்லது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 21/1994) அமைக்கப்பட்ட ஊராட்சியால் அல்லது ஊராட்சிக்கு சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள அல்லது அதன் பொறுப்பில் கொண்டுள்ள அனைத்துச் சொத்துக்கள், அதனால் அனுபவிக்கப்படும் அல்லது கொண்டிருக்கும் அனைத்து உரிமைகள் எவ்வகையில் இருப்பினும் மற்றும் அனைத்து உரிமை நலன்கள் நேர்விற்கேற்ப, அத்தகைய நகராட்சி அல்லது ஊராட்சிக்கு எதிராகச் சட்ட முறையில் இருந்து வருகிற அனைத்துக் கடப்பாடுகளும் இதன் பொருட்டு பொது அல்லது தனி ஆணையின் மூலமாக அரசு வழங்கக்கூடிய அத்தகைய பணிப்புரைகளுக்குட்பட்டு நகராட்சியின் அமைப்பு அல்லது விரிவாக்கமானது விளம்புகை செய்யப்படும் அறிவிக்கையின் தேதியன்றும் அது முதற்கொண்டும், அவ்வாறு அமைக்கப்பட்ட அல்லது அத்தகைய பரப்பிடங்கள் உள்ளடக்கப்பட்ட நகராட்சியில் உற்றமைதல் வேண்டும்.

(2) சென்னைப் பெருநகர் பகுதி தொடர்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சேவைகள் தொடர்பான அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் தவிர, அத்தகைய அறிவிக்கை தேதியன்று உள்ளவாறான, நேர்விற்கேற்ப, நகராட்சி அல்லது ஊராட்சிக்கு உரிய வரிகளின் அனைத்து நிலுவைகள், வரி தொகுத்தலின் மூலமான அல்லது செலவுகளுக்காக இழப்பீடாக அல்லது பிறவாறான பிற செலுத்தங்கள் அமைக்கப்பட்ட அல்லது அத்தகைய பரப்பிடம் உள்ளடக்கப்பட்டுள்ள நகராட்சிக்கு சேர்ந்தடைய வேண்டிய தொகையைப் போலவே வசூலிக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய நிலுவைகள் அல்லது செலுத்தங்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி கொடுபட வேண்டிய தொகைகளைப் போன்று வசூலிக்கப்படலாம்.

(3) அத்தகைய அறிவிக்கை தேதிக்கு உடனடி முன்பாக நேர்விற்கேற்ப, அத்தகைய நகராட்சி அல்லது ஊராட்சியால் விதிக்கப்பட்டு வந்த வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் அனைத்தும் இந்த சட்டத்தின் வகைமுறைகளின்படி அமைக்கப்பட்ட அல்லது அத்தகைய உள்ளூர்ப் பகுதிகள் உள்ளடக்கப்பட்டுள்ள நகராட்சியால் விதிக்கப்பட்டு வந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய வரிகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் இந்தச் சட்டத்தின் படி செய்யப்பட்ட எதன்படியும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதன்படியும் திருத்தம், நீக்கம் அல்லது மாற்றியமைக்கப்படும் வரையிலும் அதற்கிணங்கிய வகையில் நடைமுறையில் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

(4) 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 21/1994) அத்தகைய ஊராட்சியால் அல்லது அதிகார அமைப்பால் அல்லது நபரெவராலும் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் அத்தகைய நடவடிக்கைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி தொடங்கியிருப்பதைப் போன்று நகராட்சி அல்லது அதிகார அமைப்பு அல்லது நபரால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடரப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய அறிவிக்கை தேதிக்கு முன்பு அதிகார அமைப்பு எதனாலும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 21/1994) எடுக்கப்பட்ட நடிவடிக்கை எதுவும், அப்போது இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்ததைப்போன்று இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு உரிய அதிகார அமைப்பால் எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கிருந்தபோதிலும் அத்தகைய அறிவிக்கை தேதிக்கு உடனடி முன்பாக நேர்விற்கேற்ப, நகராட்சியில் அல்லது ஊராட்சியில் பணியில் இருந்த அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அத்தகைய அறிவிக்கை தேதியன்றும் அது முதற்கொண்டும் அமைக்கப்பட்ட அல்லது அத்தகைய உள்ளூர்ப் பகுதிகள் உள்ளடக்கப்பட்ட நகராட்சியின் அலுவலரொருவராக அல்லது பணியாளரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக,—

(அ) அமைக்கப்பட்ட அல்லது அத்தகைய உள்ளாட்சி பகுதிகள் உள்ளடக்கப்பட்ட நகராட்சியில் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் அதன் விளைவாக அத்தகைய அறிவிக்கை தேதிக்கு உடனடி முன்பாக அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு அடிப்படைச் சம்பளம் மற்றும் படிகள், விடுப்பு, ஓய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதியம், ஓய்வுபெறும் வயது வரம்பு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பொருந்தக்கூடிய வரையறைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் சாதகம் குறையாது இருத்தல் வேண்டும்; மற்றும்

(b) அத்தகைய அறிவிக்கை தேதி வரையிலும் அத்தகைய ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவராலும் செய்யப்பட்ட பணியானது அமைக்கப்பட்ட அல்லது உள்ளூர்ப் பகுதிகள் உள்ளடக்கப்பட்ட நகராட்சியின் கீழ் செய்யப்பட்ட பணியாகக் கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அவர் ஊதிய உயர்வுகள், விடுப்பு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதியம் மற்றும் பணிக்கொடையின் ஆகியவற்றின் நோக்கத்திற்காக அந்தப் பணியைக் கணக்கிலெடுத்துக்கொள்ளும் உரிமைத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, அத்தகைய ஊராட்சியில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அத்தகைய அலுவலர் அல்லது பணியாளர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் அத்தகைய உள்ளூர்ப் பகுதிகள் உள்ளடக்கப்பட்ட நகராட்சிப் பணியில் சேர்த்துகொள்ளும்படியான அல்லது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 104 மற்றும் 105 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாற்றம் செய்யும்படியான அத்தகைய ஊராட்சியின் பணியிலிருந்து அகற்றும் படியான செயல்பாட்டிற்கு வாய்ப்பொன்று வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய ஆட்குறைப்பின் போது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பயன்களுக்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

32 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்குப் பின், பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1–A) (1) ஆம் உட்பிரிவின்படி நகர்மன்ற தலைவர் அல்லது மன்ற உறுப்பினர் அவ்வாறு பதவியில் இருப்பது அற்றுப்போகும் நேர்வில், அந்தப் பொருட்பாடு ஆணையாளரால் மன்றத்திற்கும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கும் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.".

44 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "அல்லது நேர்விற்கேற்ப, வரிவிதிப்பு மேல்முறையீடுகள் தீர்ப்பாயம்" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

78 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளுக்காக, பின்வரும் உட்பிரிவுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"(2) (a) நகராட்சிக்குச் சொந்தமான நிலம் எதுவும் அல்லது பிற அசையாச் சொத்து எதையும் பொறுத்து விற்பனை, கொடை அல்லது பரிமாற்றம் எதுவும் மன்றத்தால் செய்யப்படுதல் கூடாது:

வரம்புரையாக, நகராட்சி நிலம் எதுவும் அல்லது அசையாச் சொத்து எதுவும் பொது நோக்கத்திற்காக, மைய அல்லது மாநில அரசால் அல்லது ஏதேனும் மைய அல்லது மாநில பொதுத்துறை நிறுவனங்கள் எதனாலும் வேண்டப்படுமாயின், மன்றமானது அத்தகைய நிலம் அல்லது கட்டத்தின் விற்பனை, கொடை அல்லது பரிமாற்றத்திற்கு அனுமதி வழங்கலாம்.

(b) நகராட்சிக்குச் சொந்தமான நிலம் அல்லது பிற அசையாச் சொத்து எதனின் விற்பனை, கொடை அல்லது பரிமாற்றம் எதுவும் அரசின் ஒப்புதலின்றி மன்றத்தால் செய்யப்படுதல் கூடாது. அரசின் ஒப்புதலின்றி மன்றத்தால் செய்யப்படுதல் கூடாது.

(c) இந்த உட்பிரிவின்படியான அசையா சொத்தின் அத்தகைய விற்பனை, கொடை அல்லது பரிமாற்றமானது, அரசால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய வீதத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) மன்றமானது,

(i) வணிகம் சாரா நோக்கங்களுக்காக பொது மக்களுக்கு மூன்றாண்டுகளுக்கு;

(ii) மைய அல்லது மாநில அரசு துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது மைய அல்லது மாநில அரசிற்கு சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள சட்டமுறை அமைப்புகளுக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு;

(iii) வணிக விற்பனை வளாங்களின் நேர்வில், பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு:

வரம்புரையாக, அத்தகைய உரிமம், குத்தகை அல்லது வாடகைக்கு விடுதலானது ஒரு சமயத்தில் மூன்று ஆண்டுகளுக்கும் அதிகமான ஒரு கால அளவிற்காக வழங்கப்படுதல் கூடாது;

(iv) வேளாண் நோக்கத்திற்காக வேளாண் நிலத்தின் நேர்வில், இருபது ஆண்டுகளுக்கு;

மேற்படாத, ஒரு கால அளவிற்கு, பயன்பாட்டிற்கு அல்லது குடியிருப்பதற்கு அதற்கு சொந்தமான நிலம் அல்லது கட்டடங்களுக்கு உரிமம், குத்தகையுரிமை வழங்கலாம் அல்லது அதனை வாடகைக்கு விடலாம்.

வரம்புரையாக, தனிப்பட்ட மற்றும் அசாதாரணமான சூழ்நிலைகளில், பின்வரும் நல்லெண்ணத்திலான பொது நோக்கங்களுக்காக, இந்த உட்பிரிவில் வகுத்துரைக்கப்படலாகும் காலத்திற்கு அப்பால் நீண்டகால குத்தகைக்கு ஒப்புதலளிக்க மன்றத்தை அரசு அனுமதிக்கலாம், அவையாவன:—

(i) கல்வி நோக்கம்;

(ii) மருத்துவ நோக்கம்;

(iii) அறக்கொடை நோக்கம்;

(iv) சமூக நல செயல்பாடுகள்;

(v) சிறுபான்மையினர் நல செயல்பாடுகள்.

(4) (3) ஆம் உட்பிரிவில் வகுத்துரைக்கப்பட்ட காலஅளவின் முடிவிற்குப் பின்பு, உரிமம், குத்தகை அல்லது வாடகைக்கு விடுவதை நீட்டிக்க அல்லது புதுப்பிக்க, அனுமதிக்கப்படுதல் கூடாது மற்றும் அதற்காக செய்யப்பட்ட விண்ணப்பம் எதுவும் இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க புதிதாக கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) (a) உரிமக்கட்டணம், குத்தகைக் கட்டணம் அல்லது வாடகையானது,—

(i) முதலாம் ஆண்டிற்கு, நிலம் அல்லது கட்டடம் ஒப்படைக்கப்படும் சமயத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்; மற்றும்

(ii) அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டின் பிப்ரவரி 28 ஆம் நாளுக்கு முன்பு செலுத்தப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, விற்பனை வளாகங்கள் அல்லது பொதுச் சந்தைகளிலுள்ள கடைகளை வாடகைக்கு விடுவதற்காக, அதன் வாடகையானது ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படுதல் வேண்டும்;

(b) உரிம கட்டணம், குத்தகை கட்டணம் அல்லது வாடகையானது, நிலுவையின் போது வகுத்துரைக்கப்படும் தேதிக்குள் செலுத்தப்படாததற்காக, பன்னிரெண்டு விழுக்காடு என்ற வீதத்தில் தனி வட்டி விதிக்கப்படுதல் வேண்டும்.

(c) உரிம கட்டணம், குத்தகை கட்டணம் அல்லது வாடகையானது, உரிமம் அல்லது குத்தகை காலத்தின் போது ஒவ்வொரு ஆண்டிற்கும் ஐந்து விழுக்காடு அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 82 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

“(2–A) (2) ஆம் உட்பிரிவின் (b) மற்றும் (c) கூறுகளின்கீழ் தாக்கல் செய்யப்பட்ட அத்தகைய விவர அறிக்கை எதுவும் சொத்து வரியை அத்தகைய மறுகணிப்பு செய்வதற்காக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து இருத்தல் வேண்டும்.”.

9. முதன்மைச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் உள்ள வகைமுறையில் (a) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;– 83 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

“(a) சாதாரணமாக வாடகைக்கு விடப்படாத ஒரு வகைக் கட்டடம் எதனின் நேர்வில், மொத்த ஆண்டு மதிப்பானது, வகுத்துரைக்கப்படும் வீதத்தில், அடிப்படை மண்டல மதிப்பு அல்லது அடிப்படை தெரு வீத மதிப்பின் படி கணக்கிடப்படுதல் வேண்டும், மற்றும் ஆணையாளரின் கருத்தில், மொத்த ஆண்டு மதிப்பானது அடிப்படை மண்டல மதிப்பு அல்லது அடிப்படை தெரு வீத மதிப்பின் அடிப்படையில் கணக்கிட முடியாது என்ற நேர்வில், வளாகத்தின் ஆண்டு மதிப்பானது நிலத்தின் கணக்கிடப்பட்ட மதிப்பின் மற்றும் கட்டடத்தின் கணக்கிடப்பட்ட தற்போதைய கட்டுமானச் செலவுத் தொகையிலிருந்து, எந்நேர்விலும், அச்செலவுத்தொகையின் பத்து விழுக்காட்டுக்குக் குறையாத மதிப்பிறக்கத்திற்காக ஒரு நியாயமான தொகையினைக் கழித்த பின்பு அத்தகைய செலவுத் தொகையின் கூட்டுத்தொகையின் ஆறு விழுக்காடாக கருதப்படுதல் வேண்டும்.”.

10. முதன்மைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவில்,– 84 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில், “முப்பது நாட்கள்” என்னும் சொற்றொடருக்காக “ஒரு மாதம்” என்னும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3) ஆம் உட்பிரிவிற்கு பின்பு பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“(4) இந்த பிரிவில் அடங்கியுள்ள எதுவும் மைய அல்லது மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது மைய அல்லது மாநில அரசுகளுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் சட்டமுறை அமைப்புகளுக்குப் பொருந்தாது.”.

11. முதன்மைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 97 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

“**97. விடுபட்ட வரிக்கணிப்பினை மதிப்பீடு செய்யும் அதிகாரம்.**— இந்தச் சட்டத்தில் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், காரணம் எதற்காகவும் இந்த அத்தியாயத்தின்படி விதிக்கப்படலாகும் வரிகள் அல்லது கட்டணங்கள் எதையும் செலுத்தும் கடப்பாடுடைய நபரெவரும், அரையாண்டு அல்லது ஆண்டு எதிலும் வரிக்கணிப்பில் விடுபட்டுள்ளார் அல்லது அவர் கணிக்கப்பட வேண்டிய வீதத்திலிருந்து குறைவான வீதத்தில் அரையாண்டு அல்லது ஆண்டு எதிலும் கணிக்கப்பட்டுள்ளாரானால் அல்லது தொடர்புடைய கட்டடம் அல்லது நிலமானது முறையான வரிக்கணிப்பில் விடுபட்டுள்ளதன் விளைவாக அரையாண்டு அல்லது ஆண்டு எதிலும் சொத்து வரியானது முறையாக கணிக்கப்படாத நேர்வில், ஆணையாளரானவர், எந்த நேரத்திலும், அத்தகைய நபருக்கு, செலுத்த வேண்டிய வரி அல்லது கட்டணத்தை கணக்கிட்டு மற்றும் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அதனை செலுத்தக் கோரி ஒரு அறிவிப்பினை சார்பு செய்யலாம் மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளானது, இயன்ற அளவில், தொடர்புடைய வரி அல்லது கட்டணத்தின் அரையாண்டு அல்லது ஆண்டில் அந்த வரிக்கணிப்பு செய்யப்பட்டதைப்போன்று, அதற்குப் பொருந்துதல் வேண்டும்.

வரம்புரையாக, கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலான வரி நிலுவை அல்லது கட்டண நிலுவையை வசூலித்தல் கூடாது.

116 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 116 ஆம் பிரிவில்,—

(i) "வரி" எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ii) "நில வருவாயின் நிலுவைத் "தொகையாக", எனும் சொற்றொடருக்காக, "116—A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

117—B ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

13. முதன்மைச் சட்டத்தின் 117—B பிரிவில்,—

(1) (2) ஆம் உட்பிரிவின், வரம்புரையில் "பணியாளர்" எனும் சொற்றொடருக்காக, "நபர்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (4) ஆம் உட்பிரிவில், "1924 ஆம் ஆண்டு இராணுவ குடியிருப்புச் சட்டம் (மையச் சட்டம் II/1924)", எனும் சொற்றொடருக்காக "2006 ஆம் ஆண்டு இராணுவ குடியிருப்புச் சட்டம் (மையச் சட்டம் 41/2006)" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

117—G ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

14. முதன்மைச் சட்டத்தின் 117—G பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"117—G மேல்முறையீடு.— (1) (குண்டத்தொகை, கட்டணம் மற்றும் வட்டித்தொகை உள்ளடங்கலான) வரிச் செலுத்தம் தொடர்பாக ஆணையாளரின் ஆணை அல்லது முடிவு எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் அல்லது பணியாளர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள், வரிவிதிப்பு மேல்முறையீடுகள் குழுவிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(2) வரிவிதிப்பு மேல்முறையீடுகள் குழுவின் முடிவு இறுதியானதாகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் கேள்விக்குரியதாகாது:

வரம்புரையாக, அத்தகைய முடிவு எதுவும் பாதிக்கப்பட்ட நபருக்கு கேட்கப்படுவதற்கான நியாயமான வாய்ப்பொன்றை வழங்கினாலன்றி செய்யப்படுதல் கூடாது.".

117—L ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 117—L பிரிவில், (1) மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளுக்காக, பின்வரும் உட்பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

"(1) எவ்விடத்திலும் விளம்பரப் பலகையை வைக்கக் கருதும் நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் அத்தகைய படிவத்தில் நகராட்சியிடம் தனது பெயரை பதிவு செய்தல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி பெயர் பதிவு செய்யப்பட்ட நபரெவரும் ஆணையாளரிடம் விளம்பரப் பலகை எதையும் வைப்பதற்கான உரிமம் ஒன்றிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2—A) (2) ஆம் உட்பிரிவின்படியான உரிமத்திற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன், அத்தகைய விவரங்களைக் கொண்ட, அத்தகைய படிவத்தில் ஆணையாளரிடம் செய்யப்படுதல் வேண்டும்".

16. முதன்மைச் சட்டத்தின் 117–M பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:– 117–M ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

"வரம்புரையாக, அரசியல் நிகழ்வின் நேர்வில், அத்தகைய விண்ணப்பமானது, மின்னணுத் திரை அல்லது விளம்பர அட்டை வைக்கப்பட்ட தேதி குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னதாக செய்யப்படுதல் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டத்தின் 117–O பிரிவில், "நில வருவாயின் நிலுவைத் தொகையாக", எனும் சொற்றொடருக்காக," 116–A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 117–O ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 117–P பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "நில வருவாயின் நிலுவைத் தொகையாக", எனும் சொற்றொடருக்காக, "116–A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக " எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 117–P ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

19. முதன்மைச் சட்டத்தின் 117–S பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 117–S ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

"**117-S நகராட்சியிடம் உற்றமைந்துள்ள சொத்துக்களில் விளம்பரம் செய்வதற்கான மற்றும் பொதுச் சொத்தினை கட்டுவதற்கான அல்லது பேணுவதற்கான உரிமைகளை வழங்குவதற்கு அதிகாரம்.**– (1) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளி (சிதைவைத் தடுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1959) அல்லது அப்போது நடைமுறையிலுள்ள பிறச் சட்டம் எதனின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆணையாளரானவர்,–

(a) ஒப்பந்த அடிப்படையில் விளம்பரத்தை காட்சிப்படுத்துவதற்கு; அல்லது

(b) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப் புள்ளிகளில் வெளிப்படைத் தன்மைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) வகைமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதன் மூலம், பொது தனியார் கூட்டுத்திட்டத்தின் அடிப்படையிலான ஒரு பொதுச் சொத்தினை கட்டுவதற்கு அல்லது பேணுவதற்கு,

நபரெவருக்கும் அல்லது நபர்களின் வகையினருக்கும் அல்லது நிறுவனம் எதற்கும் உரிமை வழங்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழ் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை எதுவும், நேர்விற்கேற்ப, 117–L பிரிவின் அல்லது 117–M பிரிவின் படி செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணத்திற்கு கூடுதலாகவும் மற்றும் அதிலிருந்து வேறுபட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில் உள்ளடங்கிய எது எவ்வாறிருப்பினும், மன்றமானது நகராட்சிக்குச் சொந்தமான அல்லது அதனிடம் உற்றமைந்துள்ள ஒரு பொதுச் சொத்தினை பேணிக்காக்கும் நபரெவரையும் அல்லது நபர்களின் ஒரு வகுப்பினரையும் அல்லது நிறுவனம் அல்லது அமைப்பு எதனையும் அதன் சொந்த செலவில், அவற்றின் சொந்த விளம்பரத்தை காட்சிப்படுத்த அனுமதிக்கலாம்.".

20. முதன்மைச் சட்டத்தின் 117–T பிரிவில், இரு இடங்களில் காணப்படும் "நில வருவாயின் நிலுவைத் தொகையாக", என்ற சொற்றொடருக்காக, "116–A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 117–T ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

118 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**21.** முதன்மைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவின், (5) ஆம் உட்பிரிவில் ''இயக்குநரிடமிருந்து ஆணைகள் பெற்ற பின்பு'' எனும் சொற்றொடரானது இறுதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

119 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**22.** முதன்மைச் சட்டத்தின் 119 ஆம் பிரிவின், ஓரத் தலைப்பில், ''வைத்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''கட்டுதல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

120 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**23.** முதன்மைச் சட்டத்தின் 120 ஆம் பிரிவில்,—

(1) (2) ஆம் உட்பிரிவில், ''ஆணையாளர்'' எனும் சொற்றொடருக்காக, ''சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் நேர்வில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் மற்றும் பிறப் பகுதிகளின் நேர்வில் நகர் ஊரமைப்பின் இயக்குநர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (6) ஆம் உட்பிரிவில், இரு இடங்களில் காணப்படும் ''ஆணையாளர்'' எனும் சொற்றொடருக்காக, ''சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் நேர்வில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் மற்றும் பிறப் பகுதிகளின் நேர்வில் நகர் ஊரமைப்பின் இயக்குநர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

122 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**24.** முதன்மைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில், ''தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்'' எனும் சொற்றொடருக்காக, ''தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

128 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**25.** முதன்மைச் சட்டத்தின் 128 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(*a*) (*a*) கூறில், ''நிலத்தில் அல்லது பொது இடத்தில் அல்லது தெருவில்'' எனும் சொற்றொடருக்காக, ''தெரு, பொது இடம், நீர்நிலை, குளம், பிற நீர் ஆதாரங்கள் அல்லது நிலம் எதிலும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(*b*) (*b*) கூறில்,—

(*i*) ''நிலத்தில் அல்லது பொது இடத்தில் அல்லது தெருவில்'' எனும் சொற்றொடருக்காக, ''தெரு, பொது இடம், நீர்நிலை, குளம், பிற நீர் ஆதாரங்கள் அல்லது நிலம் எதிலும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(*ii*) ''ஏழு நாட்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பதினைந்து நாட்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், ''பொதுத் தெரு எதிலும் அல்லது நிலம் எதிலும்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத்தெரு, நீர்நிலை, குளம், பிற நீர் ஆதாரங்கள் அல்லது நிலம் எதிலும்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

26. முதன்மைச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் (8), (9), (10) மற்றும் (11) ஆம் உட்பிரிவுகளுக்காக, பின்வரும் உட்பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும், அவையாவன:— 133 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

"(8) எந்த அனுமதியும் வழங்கப்படாதவிடத்தும் மற்றும் எந்த பிற விவரங்களையும் அளிப்பதிலுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்காக விண்ணப்பம் திருப்பி அனுப்பப்படாதவிடத்தும், விண்ணப்பதாரர், (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அனுமதி வழங்குவதற்கான காலவரம்பு முடிவுற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள், நேர்விற்கேற்ப, சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் நேர்வில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளரிடம் அல்லது பிற பகுதிகளின் நேர்வில் நகர் ஊரமைப்பின் இயக்குநரிடம், அத்தகைய விவரங்களுடன் சேர்த்து கட்டட விண்ணப்பத்தின் படி ஒன்றைத் தாக்கல் செய்யலாம்.

(9) விண்ணப்பம் ஒன்றைப் பெற்றதன் பேரில், நேர்விற்கேற்ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அல்லது நகர் ஊரமைப்பின் இயக்குநரானவர், விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களின் சீர்மையை சரிபார்த்த பின்பு மற்றும் முன்மொழியப்பட்ட கட்டடத்தின் கட்டுமானம் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கி இருப்பதாக அவர் மனநிறைவு அடைந்தபின்பு, விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக அனுமதி வழங்கலாம் அல்லது அனுமதி வழங்க மறுக்கலாம்.

(10) (6) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் அல்லது (9) ஆம் பிரிவின்கீழ், நேர்விற்கேற்ப, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளரால் அல்லது நகர் ஊரமைப்பின் இயக்குநரால் பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றை ஆட்சேபிக்கும் நபர் எவரும், அந்த ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் கால அளவிற்குள் அத்தகைய படிவத்தில் அரசிடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்யலாம் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணத்துடன் சேர்த்து செய்யப்படுதல் வேண்டும்:

வரம்புரையாக, அரசானது, மனுதாரர் அந்த மேல்முறையீட்டை உரிய காலத்தில் தாக்கல் செய்யப்படாததற்கு போதுமான காரணம் கொண்டிருப்பதாக மனநிறைவு அடைந்திருப்பின், அத்தகைய காலஅளவு முடிவுற்ற பின்பு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

விளக்கம்.— இந்த உட்பிரிவு மற்றும் (11) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "அரசு" என்பது அரசில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை என்று பொருள்படும்.

(11) அரசானது, மேல்முறையீட்டுக்கான காரணங்களை பரிசீலனை செய்த பின்பு, நேர்விற்கேற்ப, ஆணையாளர் அல்லது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அல்லது நகர் ஊரமைப்பு இயக்குநரின் ஆணையினை உறுதி அல்லது தள்ளுபடி, இரத்து அல்லது எந்த வகையிலும் மாற்றம் செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டாளருக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பு ஒன்று வழங்கப்படாமல் அவருக்கு குந்தகம் விளைவிக்கும் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுத்தல் ஆகாது.".

27. முதன்மைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:— 135 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

“(7) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்பிற்குள்ளும் விதிகளுக்கு இணங்கவும் கட்டடம் எதிலும் கட்டமைப்பு, மறுகட்டமைப்பு அல்லது மாற்றம் செய்வதை ஒழுங்குப்படுத்துவதற்கு நபரை அறிவுறுத்தும், கூறப்பட்ட உட்பிரிவின்கீழ் ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு எதற்கும் இணங்கி, நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாத நேர்வில், ஆணையாளர், அந்தக் கட்டடத்தை பூட்டிவிடலாம் மற்றும் அடைத்துவிடலாம் அல்லது முறைகேடான கட்டமைப்பை அகற்றிவிடலாம் அல்லது இடித்துவிடலாம். அத்தகைய அகற்றல் அல்லது இடித்தலின் போது நகராட்சிக்கு நேரிட்ட செலவினத்தின் செலவுகளை, 116–A பிரிவின்படியான ஒரு வரி நிலுவைத்தொகையாக தொடர்புடைய நபரிடமிருந்து வசூலித்தல் வேண்டும்.”.

137 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

28. முதன்மைச் சட்டத்தின் 137 ஆம் பிரிவில், “நில வருவாயின் நிலுவைத் தொகையாக”, எனும் சொற்றொடருக்காக, “116–A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

145 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

29. முதன்மைச் சட்டத்தின் 145 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “நில வருவாயின் நிலுவைத் தொகையாக”, எனும் சொற்றொடருக்காக, “116–A பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

155 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

30. முதன்மைச் சட்டத்தின் 155 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் வரம்புரையில், “அந்தக் கட்டடத்தில் ஏற்கனவே இருந்துவரும் அகற்றுதலுக்கான பிற வழிமுறை எதனையும் தொடர்தல் கூடாது" எனும் சொற்றொடருக்குப் பின்பு, “கழிவு நீர்த்தொட்டி, கழிவு நீர்க்குட்டை அல்லது கழிவு நீரகற்றும் வாகனங்கள் போன்ற கழிவுநீர் அகற்றுதலுக்கான பிற வழிமுறைகள் எவற்றையும் தொடர்தல் அல்லது பின்பற்றுதல் கூடாது” எனும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்.

161–A ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

31. முதன்மைச் சட்டத்தின் 161–A பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், “நில வருவாயின் நிலுவைத் தொகையாக”, எனும் சொற்றொடருக்காக, “116–A பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

170 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

32. முதன்மைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “நில வருவாயின் நிலுவைத் தொகையாக”, எனும் சொற்றொடருக்காக,” 116–A ஆம் பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

173 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

33. முதன்மைச் சட்டத்தின் 173 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (b) கூறில் “குற்றவியல் நீதித்துறை நடுவர்” எனும் சொற்றொடருக்காக, “ஆணையாளர் அல்லது குற்றவியல் நடுவர்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

175 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

34. முதன்மைச் சட்டத்தின் 175 ஆம் பிரிவின் (11) ஆம் உட்பிரிவில், “நில வருவாயின் நிலுவைத் தொகையாக”, எனும் சொற்றொடருக்காக, “116–A பிரிவின்கீழ் வரியின் நிலுவைத் தொகையாக “ எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

194 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

35. முதன்மைச் சட்டத்தின் 194 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (a) கூறுக்காக, பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(a) வகுத்துரைக்கப்படலாகும் மின்னணு வழிமுறைகள் மூலம் அத்தகைய நபருக்கு கூறப்பட்ட ஆவணத்தை அனுப்புவதன் மூலம்; அல்லது

(aa) அத்தகைய நபருக்கு கூறப்பட்ட ஆவணத்தை கொடுப்பதன் மூலம் அல்லது வழங்குவதன் மூலம்; அல்லது”

36. முதன்மைச் சட்டத்தின் 198 ஆம் பிரிவில்,— 198 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) ஆம் உட்பிரிவில்,'' விதிகளைச் செய்யலாம்'', எனும் சொற்றொடருக்காக, ''பின்னுற அல்லது முன்னுற விதிகளைச் செய்யலாம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (3) ஆம் உட்பிரிவில்,—

(a) ''சிறப்பு நிலை நகராட்சிகள்'', எனும் சொற்றொடருக்காக, ''சிறப்பு நிலை நகராட்சி மன்றங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(b) ''தேர்வு நிலை மற்றும் முதல் நிலை நகராட்சிகள்'', எனும் சொற்றொடருக்காக, ''தேர்வு நிலை மற்றும் முதல் நிலை நகராட்சி மன்றங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(c) ''இரண்டாம் நிலை நகராட்சிகள்'', என்ற சொற்றொடருக்காக,'' இரண்டாம் நிலை நகராட்சி மன்றங்கள் ''எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

37. முதன்மைச் சட்டத்தின் 199 ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 199—A பிரிவினை உட்புகுத்துதல்.

''**199-A. தமிழ்நாடு சட்டம் II/1888ன் பொருந்துகை.**- 1888 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுமக்கள் கூடுமிடங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் II/1888) வகைமுறைகள் நகராட்சிகளுக்கு பொருந்துதல் வேண்டும்''.''

38. முதன்மைச் சட்டத்தின் 200 ஆம் பிரிவில்,— 200 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவின் (h) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) (3) ஆம் உட்பிரிவின் (e) கூறில் ''நகராட்சிகள்'' எனும் சொற்றொடருக்காக, அவை காணப்படுகின்ற இரண்டு இடங்களிலும், ''நகராட்சி மன்றங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1999) செயல்பாடு 2000 ஆம் ஆண்டு இடைநிறுத்தப்பட்டது. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999 ஆனது, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை கட்டுப்படுத்தும் முந்தைய சட்டங்களில் உள்ள வகைமுறைகளுக்கு இணங்கியவாறு, குறித்த சில வகைமுறைகளை உள்ளடக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தச்) சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 35/2022) புத்தாக்கம் செய்யப்பட்டு நாளது வரையிலாக்கப்பட்டுள்ளது. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999, அதன்படி செய்யப்பட்ட விதிகளுடன் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

2. கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999—ஐ நடைமுறைப்படுத்தும்போது, அதை திறம்பட செயல்படுத்துவதற்கு கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999 இல் குறித்த சில புதிய வகைமுறைகளை வழங்குவது கட்டாயமாகிறது. அதற்கிணங்க, அரசு, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 9/1999—ஐ மேற்சொன்ன நோக்கத்திற்காக தகுந்தவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.என்.நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 1(2) (b), 4, 7, 8, 9, 14, 15, 26, 35, 36(1) ஆகிய கூறுகள், அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, நேர்விற்கேற்ப, அறிவிக்கைகள் அல்லது ஆணைகளை வெளியிடுவதற்கு அல்லது விதிகளை செய்வதற்கு, அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே மற்றும் தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.என்.நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
28 ஜூன் 2024.

**கி. சீனிவாசன்**,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2024

**1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998.

16—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16ஆம் பிரிவின் (j) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(j) தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்து அரசின் முன் ஒப்புதலுடனான ஆலோசனை பெறுதல் மற்றும் நிதி சேவைகள்:

வரம்புரையாக, தொடர்புடைய துறையின் அரசு செயலாளர், நிதித் துறையின் அரசு செயலாளர் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவானது, கொள்முதல் செய்யப்பட வேண்டிய சேவைகளுக்கான கட்டணத்தை நிர்ணயித்தல் வேண்டும்;''.

## நோக்கக் காரண விளக்கவுரை

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்(j) கூறானது, மற்றவற்றுக்கிடையில் தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் அல்லது தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் அல்லது தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்திடமிருந்து அரசின் முன் ஒப்புதலுடன் செய்யப்படும் ஆலோசனை மற்றும் நிதி சேவைகளின் கொள்முதலுக்கு, 9–ஆம் மற்றும் 10–ஆம் பிரிவுகளின் வகைமுறைகள் பொருந்தாது என வகைசெய்கிறது. தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் ஆகியன தற்போது வளர்ச்சியடைந்துள்ள காரணத்தால், அவை பொதுச் சந்தையில் போட்டியிட அனுமதிக்கப்படலாம். அதற்கிணங்க, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை (தமிழ் நாடு சட்டம் 43/1998) தகுந்தவாறு திருத்தம் செய்வதன் மூலம், கூறப்பட்ட 16ஆம் பிரிவின் (j) கூறின் வரம்பிலிருந்து மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களை நீக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**தங்கம் தென்னரசு,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
28 ஜூன் 2024.

**கி. சீனிவாசன்**,
*முதன்மைச் செயலாளர்.*

**2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2024

## குறித்த சில இயற்றுச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் வழக்கத்திலிருந்தவை அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் இருக்கக்கூடியது அற்றுப்போகக் கூடியவையாக இருப்பவை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் சட்டம் என்று வழங்கப்பெறும்.

குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

2. இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றன.

காப்புரைகள்.

3. இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும், அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும், சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது;

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத்தன்மையையோ, செல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட எதனின் விளைவுகளையோ, அல்லது ஏற்கனவே ஈட்டப்பட்டுள்ள, சேர்ந்துள்ள அல்லது அதற்கு உள்ளான ஏதேனும் உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடமைப் பொறுப்பையோ அல்லது கடப்பாட்டையோ அல்லது அதன் தொடர்பான நடவடிக்கை அல்லது தீர்வு எதனையுமோ அல்லது பற்று, தண்டம், கடமைப் பொறுப்பு, கடப்பாடு, கேட்பு உரிமை அல்லது கோரிக்கை எதனிலிருந்தும் அல்லது எதனையும் விடுவித்தலோ அல்லது நிறைவேற்றமோ அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழி எதனையுமோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது காரணி எதனையும் பாதிக்காது;

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகாரவரம்பை, அமைவுமுறையையோ அல்லது வாதுரையின் போதோ, அதன் நடைமுறையையோ அல்லது வழிமுறையையோ, அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காற்றையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, பதவியையோ அல்லது பணியமர்த்தத்தையோ, அவை முறையே எவ்வாறிருப்பினும் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டத்தால், இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்த முறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் இந்தச் சட்டத்தினால் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகாரவரம்பு எதனையும் மீட்டெடுத்தல், பதவி, வழக்காறு, கடப்பாடு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பழக்கவழக்கம், நடைமுறை, வழிமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது நடைமுறையில் இல்லாமல் இருக்கும் பொருள் இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

**இணைப்புப் பட்டியல்.**

**நீக்கறவுகள்.**

**(2 ஆம் பிரிவைக் காண்க)**

| வரிசை எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | **குடியரசுத் தலைவரின் சட்டங்கள்** |
| 1. | 1976 | 40 | 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| | | | **தமிழ்நாடு சட்டங்கள்** |
| 2. | 1941 | XVIII | 1941 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியுரிமைப் பண்ணைச் சொத்து கிராம சேவை மற்றும் மரபுவழி கிராம அலுவல்கள் (திருத்தச்) சட்டம். |
| 3. | 1943 | XXI | 1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியுரிமைப் பண்ணைச் சொத்து கிராம சேவை மற்றும் மரபுவழி கிராம அலுவல்கள் (திருத்தச்) சட்டம். |
| 4. | 1951 | VII | 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலங்கள் (குத்தகை குறைப்பு) திருத்தச் சட்டம். |
| 5. | 1953 | XIV | 1953 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 6. | 1954 | XXVIII | 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலங்கள் (குத்தகை குறைப்பு) திருத்தச் சட்டம். |
| 7. | 1954 | XXXI | 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 8. | 1955 | XXVII | 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 9. | 1956 | XI | 1956 ஆம் ஆண்டு புதுக்கோட்டை (இனாம்கள் நிலவரித் தீர்வு) திருத்தச் சட்டம். |
| 10. | 1956 | XXXVI | 1956 ஆம் ஆண்டு புதுக்கோட்டை (இனாம்கள் நிலவரித் தீர்வு) இரண்டாவது திருத்தச் சட்டம். |
| 11. | 1957 | VIII | 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 12. | 1959 | 13 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 13. | 1961 | 15 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணை நிலங்கள் (குத்தகை குறைப்பு) திருத்தச் சட்டம். |
| 14. | 1961 | 16 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனாம்கள் (தீர்வை விதிப்பு) திருத்தச் சட்டம். |
| 15. | 1961 | 30 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 16. | 1961 | 35 | 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணைச் சொத்து (துணைச்) சட்டம். |
| 17. | 1963 | 17 | 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகைதாரர்கள் மற்றும் குடியானவர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம். |
| 18. | 1963 | 19 | 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு பண்ணைச் சொத்து (குத்தகை குறைப்பு) திருத்தச் சட்டம். |
| 19. | 1964 | 26 | 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு குத்தகை – நிலங்கள் (ஒழிப்பு மற்றும் குடிவார முறைக்கு மாற்றுதல்) திருத்தச் சட்டம். |
| 20. | 1964 | 34 | 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் கட்டணத் தீர்வை (திருத்தச்) சட்டம். |

| வரிசை எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 21. | 1964 | 35 | 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வு மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டம். |
| 22. | 1967 | 13 | 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றப்பட்ட பகுதி) ஜென்மிகரம் செலுத்துதல் ஒழிப்பு (திருத்தச்) சட்டம். |
| 23. | 1967 | 14 | 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனாம் (துணை) திருத்தச் சட்டம். |
| 24. | 1968 | 8 | 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனாம் (துணை) திருத்தச் சட்டம். |
| 25. | 1968 | 15 | 1968 ஆம் ஆண்டு தமிழ்நாடு இனாம் (தீர்வை விதிப்பு) (திருத்தச்) சட்டம். |
| 26. | 1973 | 19 | 1972 ஆம் தமிழ்நாடு நகர்ப்புர நில வரி (திருத்தச்) சட்டம். |
| 27. | 1975 | 3 | 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 28. | 1975 | 5 | 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 29. | 1975 | 15 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 30. | 1975 | 41 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 31. | 1975 | 44 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 32. | 1975 | 49 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில வரி (திருத்தச்) சட்டம். |
| 33. | 1977 | 7 | 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 34. | 1978 | 21 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு உந்து வண்டித் திரவகம் விற்பனை வரிவிதிப்பு (திருத்தச்) சட்டம். |
| 35. | 1978 | 22 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 36. | 1978 | 39 | 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 37. | 1979 | 14 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 38. | 1979 | 31 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 39. | 1979 | 33 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 40. | 1979 | 47 | 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 41. | 1980 | 28 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 42. | 1980 | 29 | 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 43. | 1981 | 20 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |

| வரிசை எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 44. | 1981 | 33 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம். |
| 45. | 1981 | 34 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 46. | 1981 | 62 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 47. | 1981 | 63 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) இரண்டாம் திருத்தச் சட்டம். |
| 48. | 1982 | 4 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 49. | 1982 | 22 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 50. | 1982 | 23 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 51. | 1982 | 25 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 52. | 1982 | 43 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 53. | 1982 | 46 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 54. | 1983 | 1 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 55. | 1983 | 19 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 56. | 1983 | 20 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 57. | 1983 | 21 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 58. | 1983 | 29 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் (திருத்த) சட்டம். |
| 59. | 1983 | 34 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 60. | 1983 | 39 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 61. | 1984 | 6 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் (திருத்த) சட்டம். |
| 62. | 1984 | 14 | 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 63. | 1984 | 35 | 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தம் மற்றும் செல்லுபடியாக்குதல் சட்டம். |
| 64. | 1986 | 58 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டம். |
| 65. | 1986 | 76 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டம். |
| 66. | 1986 | 77 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஒன்பதாம் திருத்தச்) சட்டம். |
| 67. | 1986 | 78 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பத்தாம் திருத்தச்) சட்டம். |

| வரிசை எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 68. | 1986 | 79 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (பதினொன்றாவது திருத்தச்) சட்டம். |
| 69. | 1987 | 17 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 70. | 1987 | 18 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 71. | 1987 | 19 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 72. | 1987 | 20 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 73. | 1987 | 31 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 74. | 1987 | 51 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டம். |
| 75. | 1987 | 52 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டம். |
| 76. | 1987 | 53 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (செல்லுபடியாக்குதல்) சட்டம். |
| 77. | 1987 | 54 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 78. | 1989 | 17 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 79. | 1989 | 18 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 80. | 1989 | 19 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 81. | 1989 | 20 | 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம். |
| 82. | 1989 | 22 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 83. | 1989 | 26 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 84. | 1989 | 28 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 85. | 1989 | 39 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) இரண்டாம் திருத்தச் சட்டம். |
| 86. | 1990 | 22 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம். |
| 87. | 1990 | 23 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 88. | 1990 | 29 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 89. | 1990 | 30 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |

| வரிசை எண். | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 90. | 1991 | 2 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 91. | 1991 | 4 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 92. | 1991 | 10 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டம். |
| 93. | 1991 | 11 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்தச்) சட்டம். |
| 94. | 1991 | 24 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 95. | 1991 | 34 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 96. | 1991 | 35 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டம். |
| 97. | 1991 | 36 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) திருத்தச் சட்டம். |
| 98. | 1991 | 45 | 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடத்திற்குள் இயக்கூர்திகளை அனுமதித்தல் மீதான வரி (திருத்தச்) சட்டம். |
| 99. | 1994 | 43 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வு மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டம். |
| 100. | 1994 | 48 | 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 101. | 1995 | 23 | 1995 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (திருத்தச்) சட்டம். |
| 102. | 1995 | 42 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் (திருத்தச்) சட்டம். |
| 103. | 1995 | 44 | 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டம். |
| 104. | 1996 | 35 | 1996 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம். |
| 105. | 1996 | 40 | 1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம். |
| 106. | 1997 | 29 | 1997 ஆம் ஆண்டு சென்னை பெருநகரப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம். |
| 107. | 1997 | 56 | 1997 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (திருத்தச்) சட்டம். |
| 108. | 1997 | 58 | 1997 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 109. | 1999 | 1 | 1999 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் (திருத்தச்) சட்டம். |
| 110. | 2000 | 43 | 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம். |
| 111. | 2013 | 4 | 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |

**நோக்கக் காரண விளக்கவுரை**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது, குறித்த சில இயற்றுச் சட்டங்கள் மிகவும் பழமையானதாகவும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிறதாலும், அச்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு, தனது பல்வேறு அறிக்கைகளில் பரிந்துரை செய்துள்ளது. மாநில சட்ட ஆணையத்தின் கூறப்பட்ட பரிந்துரைகளைக் கருத்தில் கொண்டும், தொடர்புடைய நிர்வாகத் துறைகளுடன் கலந்தாலோசித்தும் சட்டமுன்வடிவின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் பழமையான மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களை நீக்கறவு செய்வதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ். ரகுபதி,**
*சட்டத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
28 ஜூன் 2024.

**கி. சீனிவாசன்**,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.